**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**EA.No.3/2025 in EP.No.66/2022 in OS.No.54/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திரு.தரணிகுமார் |
| Father Name | திரு.ராஜாமணி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **18.02.2026.**

**1–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

2–ம் எதிர்மனுதாரர் என் தாயார் என்றால் சரிதான். 1–ம் மனுதாரர் என் மூத்த சகோதரர் என்றால் சரிதான். 3, 4 எதிர்மனுதாரர்கள் என் உடன் பிறந்த சகோதரிகள். எனக்கு பாகப்பிரிவினை செய்து தர வேண்டும் எனக் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். வீட்டுமனை சம்மந்தமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். அந்த வீட்டு மனையை 1–ம் மனுதாரர் ஏலம் விட வேண்டுமென கேட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்து 08.01.1985–ம் தேதி ம.சா.ஆ.1 ஆவணம் மூலம் என் தாயார் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். 1985–ம் ஆண்டில் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தை எப்படி கிரையம் பெற்றார் என்பதை என் தாயாரை விசாரித்தால் தான் தெரிய வரும் என்றால் சரிதான். என் தந்தையார் மனு சொத்தை என் தாயார் பெயரில் வாங்கியதாக என் தந்தை என்னிடம் சொன்னதை வைத்து நான் மனுவில் சொல்லியிருக்கிறேன். என் தந்தை 15.12.2017–ம் தேதி இறந்துவிட்டார். என் தந்தை 2004–ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். என் தாயார் சுப்பிரமணியப்பிள்ளை என்பவரிடமிருந்து 429 ச.அடி சொத்தை 25.08.2005–ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் இணையதள பதிவிறக்க நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும். என் தாயார் 27.10.2003–ம் தேதி சுப்பிரமணியப்பிள்ளை மற்றும் சிலரிடமிருந்து கிரையம் வாங்கியதற்கான இணையதள பதிவிறக்க கிரையப்பத்திர நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும். என் பாட்டி மாணிக்கம்மாள் என்பவரிடமிருந்து 20.10.2003–ம் தேதி என் தாயார் வீட்டு மனை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என் தந்தையார் என் தாயார் பெயரில் கிரையம் வாங்கினார். அதற்கான இணையதள பதிவிறக்க கிரையப்பத்திர நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகும். இந்த மனு சொத்தை பொறுத்து மட்டும் இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.377/2024 நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என் தந்தைக்கும், தாயாருக்கும் மாங்குப்பம் கிராமம் தான் பூர்வீகம் என்றால் சரிதான். என் தாயார் பால் வியாபாரம் செய்து வருமானம் ஈட்டி வந்தார் என்றால் சரியல்ல. மனு சொத்தும்,

இன்னும் பிற சொத்துகளும் என் தாயாரின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல. அதனால் என் தாயார் பெயரில் உள்ள சொத்துகளில் எனக்கோ என் மூத்த சகோதரருக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டும் என்றும், அலைக்கழிக்க வேண்டுமென்றும் இந்த மனுவை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.02.18 15:30:10 -0500

I Additional District Judge,
Ranipet.